ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,711 — 1966 සැප්තැම්බර් 2 වැනි සිකුරාදා — 1966.9.2

14,711 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி II—சட்டசம்பந்தமானது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| விதிகள் .. .. .. | — | பிசுக்கால் விற்பனைபற்றிய அறிவித்தல்கள் .. | — |
| உச்சமன்ற அறிவித்தல்கள் .. .. | — | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் .. | — |
| உச்சமன்ற குற்ற விசாரணைகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் .. .. | — |
| மாவட்டமன்ற, சிறிய மன்ற அறிவித்தல்கள் .. | — | நொத்தாரிசுமார் நிரல் .. .. .. | — |
| கடனிறுக்க முடியாமைக்காய வழக்குகளின் அறிவித்தல்கள் .. | — | நானாவிதம் .. .. .. | 21 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் .. .. | — | | |


## நானாவிதம்

**பொதுவாகப் பொதுசனத்துக்கும், விசேடமாக உத்தேச இலவச அரசாங்க சட்ட உதவி மசோதாவினால் பாதிக்கப்படும் அல்லது நன்மையடையும் ஆட்கள், சங்கங்கள் அல்லது இணைக்கப்பட்ட சபைகள் ஆகியோரெல்லோருக்கும்**

63 ம் இலக்கத் தேர்தற்றொகுதியாகிய ஹபருதுவைப் பாராளுமன்ற அங்கத்தவராகிய பிறின்ஸ் குணசேகரா ஆகியவர், இலங்கைப் பிரதிநிதிகள் சபையின் நிலையான கட்டளைகளின் 51, 52 ஆகிய பிரிவுகளின நியதிகளுக்கமைய, தனிப்பட்ட அங்கத்தவரின் மசோதாவொன்றைப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்க விரும்புகிறாரென எல்லா ஆட்களுக்கும், சங்கங்களுக்கும் அல்லது இணைக்கப்பட்ட சபைகளுக்கும் இதனால் அறிவிக்கப்படுகின்றது.

அத்தகைய மசோதாவின் நோக்கங்களும் பிரதான அம்சங்களும் பின்வருமாறு :—

(1) அற்றேணிஜெனறல் திணைக்களத்தைப் போன்ற அதே ரீதியில் பொது எதிராளிதரப்புத் திணைக்களமொன்றை நிறுவுதல்.

(2) குடியுரிமை வழக்குகளுக்காக, வழக்காளி தரப்புத் திணைக்களம் எதிராளி/எதிர்ப்பாளர் தரப்புத் திணைக்களம் என அழைக்கப்படும் 2 புதிய திணைக்களங்களைத் தாபித்து, பராமரித்து, நிர்வகித்தல்.

(3) வழக்காடுவோரெல்லோருக்கும் இலவச அரசாங்க சட்ட உதவி அளித்தல்.

(4) இப்போதுள்ள முறையின்படி வழக்காடுவோர் பணமிழந்து ஏழைகளாவதைத் தடுத்தல்.

(5) துரிதமாகவும், மலிவாகவும், இன்னுங் கூடிய சித்திகரமாகவும் நீதி பரிபாலிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தல்.

(6) நீதியின் முன் எல்லோரும் சமம் என்பதைச் சாதாரண மக்கள் புரிந்துகொள்ளச் செய்தல்.

(7) வழக்காடுவோரின் வறுமை காரணமாக இப்போதுள்ள முறையின்படி சட்டவறிஞர்கள் கேட்கும் கட்டணங்களைக் கொடுக்கவியலாமையினால் மாத்திரம் நீதிமுறை தவறுதலைத் தடுத்தல்.

(8) சட்டவறிஞர்களால் விதிக்கப்படும் சலார்களெல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி, அத்தகைய கட்டணங்களை அரசாங்கத் திணைக்களமொன்றின் மூலங் கொடுப்பதற்கான வழிவகைகளை வகுத்தல்.

பிரதிநிதிகள் சபை,
கொழும்பு,
20.8.66

பிறின்ஸ் குணசேகர,
ஹபராதுவ பாராளுமன்ற அங்கத்தவர்,
பிரதிநிதிகள் சபை, கொழும்பு.

9-137/1

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது.** வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

**அரசாங்க அச்சகம்,**
**கொழும்பு,**
**1966 ம் ஆண்டு பெப்புருவரி மீ 1 ந் உ.**

**பேர்னட் டி சில்வா,**
**அரசாங்க அழுத்தகன்.**

**பொதுவாகப் பொதுசனத்துக்கும், விசேடமாக உத்தேச இலவச அரசாங்கச் சட்ட உதவி மசோதாவினால் பாதிக்கப்படும் அல்லது நன்மையடையும் ஆட்கள், சங்கங்கள் அல்லது இணைக்கப்பட்ட சபைகள் ஆகியோரெல்லோருக்கும்**

63 ஆம் இலக்கத் தேர்தற்றொகுதியாகிய ஹபருதுவைப் பாராளுமன்ற அங்கத்தவராகிய பிறின்ஸ் குணசேகரா ஆகியவர், இலங்கைப் பிரதிநிதிகள் சபையின் நிலையான கட்டளைகளின் 51, 52 ஆகிய பிரிவுகளின் நியதிகளுக்கமைய, தனிப்பட்ட அங்கத்தவரின் மசோதாவொன்றைப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்க விரும்புகிறாரென எல்லா ஆட்களுக்கும், சங்கங்களுக்கும் அல்லது இணைக்கப்பட்ட சபைகளுக்கும் இதனால் அறிவிக்கப்படுகின்றது.

அத்தகைய மசோதாவின் நோக்கங்களும் பிரதான அம்சங்களும் பின்வருமாறு :—

(1) வைத்திய பொறியியல் மாணவர்களின் விடயத்திலும் ஏனைய பல்கலைக்கழக, தொழிற்கல்விகளிலும் போல, இலங்கைச் சட்டக் கல்லூரியில் முறையாகச் சேரும் மாணவர்களெல்லோருக்கும் இலவச சட்டக்கல்விப் போதனைக்கு ஏற்பாடு செய்தல் மூலம் சட்டத்துறையில் இலவசக் கல்விக்கு ஏற்பாடு செய்தல்.

(2) இலங்கைச் சட்டக் கல்லூரியில் சட்டப் பயிற்சி பெறவிரும்பும் அல்லது முயலும் வறிய மாணவர்களுக்குச் சட்டக்கல்வி பெற வசதியளித்தல்.

(3) சட்டக்கல்வியின் பொறுப்பு, கட்டுப்பாடு, மேற்பார்வை ஆகியன இப்போது போலச் சட்டக்கல்விப் பேரவையில் தொடர்ந்து இருத்தல்.

(4) சட்டமாணவர்களிடம் சட்டக் கல்விப் பேரவையினால் விதிக்கப்படுங் கட்டணங்களை ஒழித்தல்.

(5) வழக்கறிஞர், வழக்குரைஞர் என்ற இப்போதைய வேறுபாட்டை ஒழித்தல் மூலம் வழக்காடுவோர்களில் வறியவர்களுக்கு வழக்காடுஞ் செலவைக் குறைத்தல்.

பிறின்ஸ் குணசேக்கர,
ஹபராதுவ பாராளுமன்ற அங்கத்தவர்.

பிரதிநிதிகள் சபை, கொழும்பு.
20.8.66

9—137/2

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரயவிகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு. அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிரீம் கோட் புரொக்ராேல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு:

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 15 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 15 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 165 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 330 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்பட்டல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.7.66 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 36 00 | 49 00 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 26 00 | 31 50 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் ... ... ... | 33 50 | 41 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை சதம் | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ..., | 40 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 80 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 20 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 40 | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படாது, இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1966**

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** .. | **2. 9.66** | வெள்ளி | .. | **26. 8.66** | வெள்ளி | பி.ப. | **3.30** |
| | **9. 9.66** | வெள்ளி | .. | **2. 9.66** | வெள்ளி | பி.ப. | **3.30** |
| | **16. 9.66** | வெள்ளி | .. | **9. 9.66** | வெள்ளி | பி.ப. | **3.30** |
| | **23. 9.66** | வெள்ளி | .. | **16. 9.66** | வெள்ளி | பி.ப. | **3.30** |
| | **30. 9.66** | வெள்ளி | .. | **23. 9.66** | வெள்ளி | பி.ப. | **3.30** |
| **ஒற்ரோபர்** .. | **7.10.66** | வெள்ளி | .. | **30. 9.66** | வெள்ளி | பி.ப. | **3.30** |
| | **14.10.66** | வெள்ளி | .. | **7.10.66** | வெள்ளி | பி.ப. | **3.30** |
| | **20.10.66** | வியாழன் | .. | **14.10.66** | வெள்ளி | பி.ப. | **3.30** |
| | **27.10.66** | வியாழன் | .. | **20.10.66** | வியாழன் | நண்பகல் | **12** |
| **நவெம்பர்** .. | **3.11.66** | வியாழன் | .. | **27.10.66** | வியாழன் | நண்பகல் | **12** |
| | **10.11.66** | வியாழன் | .. | **3.11.66** | வியாழன் | நண்பகல் | **12** |
| | **18.11.66** | வெள்ளி | .. | **10.11.66** | வியாழன் | நண்பகல் | **12** |
| | **25.11.66** | வெள்ளி | .. | **18.11.66** | வெள்ளி | நண்பகல் | **12** |
| **திசெம்பர்** .. | **2.12.66** | வெள்ளி | .. | **24.11.66** | வியாழன் | பி.ப. | **3.30** |
| | **9.12.66** | வெள்ளி | .. | **2.12.66** | வெள்ளி | பி.ப. | **3.30** |
| | **16.12.66** | வெள்ளி | .. | **8.12.66** | வியாழன் | பி.ப. | **3.30** |
| | **23.12.66** | வெள்ளி | .. | **16.12.66** | வெள்ளி | பி.ப | **3.30** |
| | **30.12.66** | வெள்ளி | .. | **22.12.66** | வியாழன் | பி.ப. | **3.30** |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1966 ம் ஆண்டு யூலை மீ 15 ம் வ.

**பேர்ணுட் த சில்வா,**
**அரசாங்க அழுத்தகன்.**

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.